**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

Calender :
Preliminary Register :
Sessions :

Miscellaneous :
Case No. : **S.C.20/2022**

Deposition of witness for :

Prosecution : **P.W. 2**
Defence : **D.W.**
Court : **C.W.**

| | | | |
|---|---|---|---|
| **Name :** | ஆதிலட்சுமி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **18.11.2025**

**1 வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். அ.சா.1 என்தகப்பனார் ஆவார். 1வது எதிரி என்சித்தப்பா மகனாவர். வழக்கில் இறந்துபோன பச்சையம்மாள் என்பாட்டி ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்புஒருநாள் காலை சுமார் 07.00 மணிக்கு அந்த பக்கம் பால்கொண்டு சென்றவர்கள் என்பாட்டி இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அதன்பின்னர் நான் போய்பார்த்தேன். அவர் கட்டிலில் இறந்துகிடந்தார். அப்போது என்சித்தப்பா வீட்டில் இருந்தார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

என்அப்பா சிறுவாச்சூரில் தனியார் பள்ளியில் வேலைசெய்கிறார் என்றால் சரிதான். என்சித்தப்பா சங்கர் இறந்துவிட்டார். என்சித்தப்பா உயிரோடு இருந்துபோது பொதுவில் இருந்த நிலத்தை விற்று என்பாட்டிக்கு ரூ.1லட்சம்

கொடுத்திருந்தார்கள் என்றால் கொடுத்திருந்தார்கள். அந்த ரூ.1லட்ச ரூபாயை என்சித்தப்பா வாங்கிகொண்டார் என்றால் சரிதான். என்பாட்டியை அவர் தான் பார்த்து வந்தார். என்சித்தப்பா இறந்தபின்னர் 1வது எதிரியும், அவர் அம்மாவும் சேர்ந்து என்பாட்டியை வீட்டிலிருந்து காலிசெய்யவேண்டுமென்று அடிக்கடி சண்டை போட்டு கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அதற்கு என்பாட்டி நான் கொடுத்த ரூ.1லட்சம் பணத்தை திருப்பி கொடுத்தால் காலிசெய்து விடுவதாக சொன்னார் என்றால்சரியல்ல. 1வது எதிரியும், அவருடைய அம்மாவும் சேர்ந்து என்பாட்டியை அடித்ததை நான்பார்த்துவிட்டு என்அப்பாவிடம் தகவல் சொன்னேன் என்றும், அவர் வந்து சத்தம்போட்டார் என்றால் சரியல்ல. வீட்டை காலிசெய்யவேண்டுமென்றும், இல்லையென்றால் என்றைக்கு இருந்தாலும் கிளவிக்கு என்கையால் தான் சாவு என்றும், 1வது எதிரி சொன்னார் என்றால் சரியல்ல. 20.09.2021ம்தேதி காலையில் நான் என்பாட்டிக்கு டீ கொடுக்க சென்றபோது அவர் மல்லாந்த நிலையில் கழுத்தில் கன்றிய காயத்துடன் இறந்துகிடந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சொன்னது போன்று 1வது எதிரி செய்துவிட்டதாக தெரியவருகிறது என்று போலிசார் விசாரணையில் நான் சென்னேன் என்றால்சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் உண்மைவிவரங்களை கூறிவிட்டு 1வது எதிரி என்சித்தப்பா மகன் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி உண்மை விவரங்களை மறைத்துவிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

இல்லை.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.